Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 148 | உள்ளூர் - 28.05.2026 | வியாழன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 148 | வெளியூர் - 29.05.2026 | வெள்ளி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**மத்திய அரசு 22 காலிப்பணியிடங்கள்!**

**2026 குரு பெயர்ச்சி; 12 ராசிகளுக்கான பலன்கள்!**

**பக்ரீத் பண்டிகை கோலாகல கொண்டாட்டம்!**

**இரண்டாக பிரிகிறது ஐ.பி.எல். போட்டிகள்?**

# ஹார்முஸ் ஜலசந்தியை எந்த நாடும் கட்டுப்படுத்த விட மாட்டோம்: அமெரிக்க அதிபர் டிரம்ப்!



வாஷிங்டன், மே 28–

மேற்காசிய போரால் ஹார்முஸ் ஜலசந்தியில் தொடர்ந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், பதற்றம் தொடர்ந்து நீடித்து வரும் நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கடுமையான எச்சரிக்கை ஒன்றை விடுத்தார். இது குறித்து டிரம்ப் கூறியதாவது: ஹார்முஸ் ஜலசந்தி அனைவருக்கும் திறந்திருக்கும். இவை சர்வதேச கடல் பகுதிகள். இதை யாரும் கட்டுப்படுத்த முடியாது.

இது தற்போது நாம் நடத்தி வரும் பேச்சுவார்த்தைகளின் ஒரு பகுதியாகும். ஓமான் மற்ற நாடுகளைப் போல நடந்து கொள்ள வேண்டும். இல்லையெனில் அதை நாங்கள் அழித்து விட வேண்டிய நிலை ஏற்படும். அதை அவர்கள் நன்றாக புரிந்துகொண்டுள்ளனர்,” என்றார்.

**ஈரானின் புதிய திட்டம்**

ஹார்முஸ் நீரிணையில் தனது அதிகாரத்தை நிலைநாட்ட முயலும் ஈரான், அந்த வழியாக செல்லும் கப்பல்களிடமிருந்து கட்டணம் வசூலித்து, அதன் வருவாயை ஓமனுடன் பகிர்ந்து கொள்ளும் திட்டத்தையும் முன்வைத்துள்ளது. இதனை அடுத்தே டிரம்ப் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

# சித்தராமையா ராஜினாமா? டிகே சிவகுமார் சி.எம்.!



கர்நாடகா, மே. 28–

கர்நாடக அரசியலில் பெரிய மாற்றம் ஏற்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தற்போதைய முதல்வர் Siddaramaiah பதவி விலக தயாராக இருப்பதாகவும், துணை முதல்வர் D. K. Shivakumar புதிய முதல்வராக பொறுப்பேற்க வாய்ப்பு அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. காங்கிரஸ் உயர்மட்டத் தலைமையுடன் நடந்த ஆலோசனைகளுக்குப் பிறகு, டி.கே. சிவகுமார் பெயர் உறுதியாகியுள்ளதாக தேசிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. பதவியேற்பு விழா மே 29 அல்லது மே 31 அன்று நடைபெறலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

பெங்களூருவில் முதல்வர் இல்லத்தில் நடைபெற்ற “பவர் பிரேக்பாஸ்ட்” சந்திப்பு அரசியல் வட்டாரத்தில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது. இதில் சித்தராமையா மற்றும் டி.கே. சிவகுமார் நேருக்கு நேர் சந்தித்து ஆலோசனை நடத்தியதாக தகவல்கள் வெளியாகின.

சித்தராமையா ராஜினாமா செய்தால், 2023–ல் தொடங்கிய அவரது இரண்டாவது ஆட்சி காலம் இடைநிறுத்தப்படும். அதேசமயம், டி.கே. சிவகுமார் கர்நாடகத்தின் புதிய காங்கிரஸ் முகமாக உருவெடுப்பார் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

# சோனியா, ராகுல் உடனான சந்திப்பு ரத்து; அடுத்த வாரம் சந்திக்க வாய்ப்பு?



புதுடெல்லி, மே. 28–

தமிழக சட்டமன்ற தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக த.வெ.க. வென்றது. இதையடுத்து. காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், வி.சி.க., ஐ.யு.எம்.எல். ஆகிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து த.வெ.க. ஆட்சி அமைத்தது. முதல்–அமைச்சர் விஜய் உட்பட 35 பேர் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர்.

இந்நிலையில், முதல்–அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு முதல் முறையாக விஜய், 2 நாட்கள் அரசுமுறைப் பயணமாக நேற்று டெல்லி புறப்பட்டு சென்றார். டெல்லியில் பிரதமர் மோடியை சந்தித்து பேசிய விஜய், தொடர்ந்து மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாரமனை சந்தித்து பேசினார். அவர்களிடம் தமிழக அரசுக்கான பல்வேறு திட்டங்கள் மற்றும் கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை முதல்–அமைச்சர் விஜய் வழங்கினார்.

இதனை தொடர்ந்து, இன்றைய தினம் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், நாடாளுமன்ற குழு தலைவருமான சோனியா காந்தியை அவரது இல்லத்தில் தமிழக முதல்–அமைச்சர் மரியாதை நிமித்தமாக இன்று சந்தித்து பேசுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

தொடர்ந்து ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழக அரசின் நிதி உதவியோடு நிறுவப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையை முதல்–அமைச்சர் விஜய் திறந்து வைப்பார் என்றும் கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சோனியா, ராகுல் உடனான முதல்–அமைச்சர் விஜய்யின் சந்திப்பு ரத்து செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து முதல்–அமைச்சர் விஜய் தனது டெல்லி பயணத்தை முடித்துவிட்டு சென்னை புறப்பட்டார். அவர் தனி விமானம் மூலம் டெல்லியில் இருந்து சென்னை வர உள்ளார்.

**அடுத்த வாரம் சந்திப்பு?**

காலை 10 மணியளவில் இந்த சந்திப்பு நடைபெறும் என கூறப்பட்ட நிலையில், திடீரென சோனியா காந்தி – விஜய் சந்திப்பு ரத்து செய்யப்பட்டது. எனினும், நேற்று இரவே இந்த சந்திப்பு ஒத்திவைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. சந்திப்பு ரத்து செய்யப்பட்டதற்கான காரணம் குறித்து எந்த அதிகாரப்பூர்வ விளக்கமும் வெளியாகவில்லை. இதற்கிடையில், சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தியை விஜய் அடுத்த வாரம் சந்திக்கும் வாய்ப்பு இருப்பதாக காங்கிரஸ் வட்டார தகவல்களை மேற்கோள் காட்டி பிரபல ஆங்கில தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.



தலைமைச் செயலகத்தில் பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகரை அதிமுக எம்.எல்.ஏக்கள் எஸ்.பி.வேலுமணி, விஜயபாஸ்கர் உள்ளிட்டோர் சந்தித்து, அதிமுக சட்டமன்ற தலைவராக பழனிசாமியை தேர்ந்தெடுத்துள்ளதாக கடிதம் அளித்தனர்.

## அமெரிக்க தாக்குதல்..

# உலகை பதறவைத்த ஈரான் மோதல்! ஹோர்முஸ் ஜலசந்தி கொதிப்பு..!!

## என்னெய் சந்தையில் அதிர்ச்சி..!




வாஷிங்டன், மே. 28–

மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஹோர்முஸ் ஜல சந்திக்கு அருகே பல ஈரானிய தாக்குதல் ட்ரோன்களை அமெரிக்கப் படைகள் சுட்டு வீழ்த்தியது.. இதற்கு ஈரான் கடும் கண்டனம் தெரிவித்த நிலையில் தற்போது அமெரிக்கா மீண்டும் புதிய தாக்குதல்களை நடத்தியது.. நேற்று (உள்ளூர் நேரப்படி) ஈரானிய இராணுவத் தளம் ஒன்றின் மீது அமெரிக்கா புதிய தற்காப்புத் தாக்குதல்களை நடத்தியதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கை குறித்து அறிந்த அதிகாரிகள், ஹோர்முஸ் ஜலசந்தியைச் சுற்றி ஒரு சாத்தியமான அச்சுறுத்தலாகக் கருதப்பட்ட 4 ஈரானிய ஒருவழித் தாக்குதல் ட்ரோன்களை அமெரிக்க படைகள் இடைமறித்து அழித்ததாகவும் அவர்கள் கூறினர்.

பந்தர் அப்பாஸில் உள்ள ஒரு ஈரானிய தரைக்கட்டுப்பாட்டு நிலையத்தையும் அமெரிக்கப் படைகள் குறிவைத்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த விவகாரம் குறித்து பகிரங்கமாகக் கருத்துத் தெரிவிக்க அவர்களுக்கு அதிகாரம் இல்லாததால், அந்த அதிகாரிகள் பெயர் குறிப்பிட விரும்பாமல் பேசினர்.

அமெரிக்கா ஈரான் இடையே தொடர்ச்சியான இராஜதந்திர முயற்சிகள் இருந்தபோதிலும், பதற்றம் அதிகரித்துள்ள சூழலில், இந்த வாரத்தில் ஈரானுக்கு எதிரான இரண்டாவது அமெரிக்க “தற்காப்புத் தாக்குதல்” இந்த சமீபத்திய இராணுவ நடவடிக்கையாகும்.

அமெரிக்கா ஈரான் இடையே கடந்த 3 மாதங்களாக போர் நடந்து வருகிறது.. இந்த போர் காரணமாக உலகப் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது.. இந்த மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு ஒப்பந்தத்தை அவசரமாக எட்டுவதற்கு, நவம்பரில் நடைபெறவிருக்கும் இடைக்காலத் தேர்தல்கள் தன்னை நிர்ப்பந்திக்காது என்று அதிபர் டொனால்ட் டிரம்ப் சமீபத்தில் கூறியிருந்தார்.. இதை தொடர்ந்து இந்தத் தாக்குதல்கள் நடந்தன.

அமைச்சரவைக் கூட்டத்தின் போது பேசிய டிரம்ப், ஈரானுடனான ஒரு உடன்பாடு விரைவில் எட்டப்படலாம் என்று நம்பிக்கை தெரிவித்தார். வார இறுதியில், அமெரிக்காவும் ஈரானும் ஒரு தீர்வை “பெரும்பாலும் பேச்சுவார்த்தை மூலம் எட்டியுள்ளன” என்று அவர் கூறியிருந்தார், இருப்பினும் பேச்சுவார்த்தைகள் இன்னும் நிலையற்றதாகவும் தீர்க்கப்படாமலும் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈரானின் பொருளாதாரம் கடுமையாக வீழ்ச்சியடைந்து வருவதாகக் கூறிய அவர், அந்நாடு ஒரு மோசமான நிலையை அடைந்துள்ளதாகவும், பணவீக்கம் 250 சதவீதமாக உயர்ந்துள்ளதாகவும், ஈரானிய நாணயம் அதன் மதிப்பை முற்றிலுமாக இழந்துவிட்டதாகவும் குற்றம் சாட்டினார். ஈரானின் முழுப் பொருளாதார அமைப்பும் சீர்குலைந்துவிட்டது என்று அவர் கூறினார்.

ஈரானி அணுசக்தி லட்சியங்கள் குறித்த தனது நீண்டகால நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்திய டிரம்ப், ஈரான் “அணு ஆயுதத்தை வைத்திருக்க முடியாது” என்று அறிவித்தார். மேலும், “அவர்கள் அதை உடனடியாகப் பயன்படுத்துவார்கள். நான் இதை நமக்காக மட்டுமல்ல, உலகத்திற்காகவும் செய்கிறேன்” என்றும் கூறினார்.

ஹோர்முஸ் ஜலசந்தியின் கட்டுப்பாடு, அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே ஒரு பெரும் சர்ச்சையாக உருவெடுத்துள்ளது. உலகின் எண்ணெய் விநியோகத்தில் கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பங்கு இந்த வழித்தடத்தின் வழியாகச் செல்வதால், இது பெரும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்தது. ஜலசந்தி வழியாகச் செல்லும் கப்பல்களிடம் சுங்கம் வசூலித்து, அந்த வருவாயை ஓமானுடன் பகிர்ந்து கொள்வது குறித்து ஈரான் பரிசீலித்து வருவதாகக் கூறப்படுகிறது. போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு ஒப்பந்தத்தின் ஒரு பகுதி இது என்று ஈரான் கூறியுள்ளது.

இருப்பினும், வெள்ளை மாளிகை இந்த அறிக்கைகளை மறுத்துள்ளது. ஹோர்முஸ் ஜலசந்தியை யாராலும் கட்டுப்படுத்த முடியாது என்பதை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெளிவுபடுத்தியுள்ளார். “அதை யாரும் கட்டுப்படுத்துவதில்லை. நாங்கள் அதைக் கண்காணிக்கிறோம், ஆனால் யாரும் கட்டுப்படுத்துவதில்லை,” என்று டிரம்ப் கருத்து தெரிவித்துள்ளார்.

ஈரான் உடனான எந்தவொரு அணுசக்தி ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகவும் பொருளாதாரத் தடைகள் தளர்த்தப்படும் சாத்தியத்தையும் டிரம்ப் நிராகரித்தார். ஈரான் தனது அதிக செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை, அதற்கு ஈடாகப் பொருளாதாரச் சலுகைகளைப் பெறாமல் ஒப்படைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஈரான் தனது செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ரஷ்யா அல்லது சீனாவிடம் ஒப்படைப்பதை அமெரிக்கா ஏற்றுக்கொள்மா என்று கேட்கப்பட்டபோது, அத்தகைய நடவடிக்கைக்குத் தான் ஆதரவாக இல்லை என்று டிரம்ப் தெரிவித்தார்.

மேலும் “ஈரான் தங்கள் உயர் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை, தடைகளை நீக்குவதற்காக ஒப்படைக்கப் போவதில்லை. இல்லை, இல்லை, நிச்சயமாக இல்லை.” என்று திட்டவாட்டமாக கூறினார்..

# தியாகம், கருணை, சமத்துவம் போதிக்கும் நாள்..!- முதலமைச்சர் விஜய் பக்ரீத் வாழ்த்து!

சென்னை, மே. 28–

பக்ரீத் திருநாளை கொண்டாடும் அன்பிற்கினிய இஸ்லாமிய உறவுகள் அனைவருக்கும் நல்வாழ்த்துகள் என முதலமைச்சர் விஜய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தவெக எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:–

தியாகம், கருணை. சமத்துவம். மனிதநேயம் ஆகியவற்றை மனித குலத்திற்குப் போதிக்கும் ஈகைப் பெருநாளான பக்ரீத் திருநாளைக் கொண்டாடும் அன்பிற்கினிய இஸ்லாமிய உறவுகள் அனைவருக்கும் நல்வாழ்த்துகள். இப்பெருநாளில் உலகம் எங்கும் அன்பு, சகோதரத்துவம், மத நல்லிணக்கம் தழைத்தோங்கிட அனைவரும் உறுதியேற்போம்.

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.



தலையங்கம்

மதுரை மணி
வியாழக்கிழமை 28.05.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 14-ம் தேதி

# வச்ச மை கூட இன்னும் அழியல.. மறுபடியும் தேர்தலா?




2026ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் தமிழ்நாட்டு வரலாற்றில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியதோடு மட்டுமில்லாமல் மக்கள் மனதிலும் நீங்கா இடம் பிடித்த ஒரு தேர்தலாக மாறி இருக்கிறது. பாரம்பரியமான திராவிட கட்சிகளுக்கு மாற்றாக மக்கள் இந்த முறை விஜய்–இன் தமிழக வெற்றிக்கழகம் கட்சிக்கு வாக்களித்தனர்.

தனி பெரும் கட்சியாக தேர்தலில் வெற்றி பெற்றாலும் தவெக தனித்து ஆட்சி அமைக்க முடியவில்லை. இதனால் திமுக கூட்டணியில் இருந்த கட்சிகள் தவெகவுக்கு ஆதரவு தந்து தவெக ஆட்சி அமைத்தது. விஜய் முதலமைச்சராக பதவியேற்றார். தமிழ்நாட்டின் சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு முடிந்து கிட்டத்தட்ட ஒரு மாதம் தான் ஆகியிருக்கிறது. முதலமைச்சராக விஜய் பதவியேற்று 16 நாட்கள் தான் ஆகிறது. ஆனால் அதற்குள் 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்தும் சூழல் உண்டாகி இருக்கிறது.

சட்டமன்றத் தேர்தலில் முதலமைச்சர் விஜய் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு என இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டு இருந்தார். இரண்டு தொகுதியிலுமே அவர் வெற்றி பெற்ற நிலையில் திருச்சி கிழக்கு தொகுதியை அவர் ராஜினாமா செய்தார். இதனால் திருச்சி கிழக்கு தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டது. கூடிய விரைவில் அங்கே இடைத்தேர்தல் நடத்தப்பட இருக்கிறது.

இதற்கிடையே அதிமுகவில் பிளவு ஏற்பட்டு சில அதிமுக எம்எல்ஏக்கள் அதிமுகவிலிருந்து விலகி தங்களுடைய எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்து விட்டு தவெகவில் இணைந்து வருகின்றனர். அந்த வகையில் தமிழக அரசியலில் எதிர்பாராத திருப்பமாக அதிமுக எம்எல்ஏக்கள் மதுராந்தகம் மரகதம் குமாரவேல் ,பெருந்துறை ஜெயக்குமார், தாராபுரம் சத்யபாமா ஆகியோர் எம் எல் ஏ பதவியை ராஜினாமா செய்தனர். அவர்கள் தமிழக வெற்றிக்கழகத்தில் இணைந்துள்ளனர். இதனால் அந்த தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாசமுத்திரம் தொகுதி அதிமுக எம்எல்ஏவான இசக்கி சுப்பையா சட்டப்பேரவையில் அவை தலைவர் ஜேசிபி பிரபாகரை சந்தித்து தன்னுடைய ராஜினாமா கடிதத்தை கொடுத்தார். இதனை அடுத்து அந்த தொகுதியும் காலியாகிறது. எனவே தமிழ்நாட்டில் விரைவில் 5 சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் நடக்க உள்ளது.

தேர்தல் முடிந்து வாக்குப்பதிவின்போது கையில் வைக்கப்பட்ட மை கூட அழியவில்லை அதற்குள் மீண்டும் ஒரு தேர்தலா என மக்கள் கேள்வி எழுப்ப தொடங்கி இருக்கின்றனர். தவெக மீது குதிரை பேர குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. தமிழ்நாட்டு அரசியலை பொறுத்தவரை எம்எல்ஏ உயிரிழந்தால் மட்டுமே அந்த தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டு இடைத்தேர்தல் நடத்தப்படும். தமிழ்நாட்டின் அரசியல் ஆளுமைகளான கருணாநிதி மற்றும் ஜெயலலிதாவின் மறைவுக்கு பின்னர் தமிழ்நாட்டு அரசியலே மாறுபட்டு இருக்கிறது. அதற்குப் பின்னர் தான் உட்கட்சி பூசல், கருத்து வேறுபாடு, இரண்டு மூன்று அணிகளாக பிரிவது , கட்சி தாவுவது , எம் எல் ஏ பதவியை ராஜினாமா செய்வது அதிகமாக நடக்கின்றன.

முதன்முறை 2014 ஆம் ஆண்டில் தேமுதிக எம்எல்ஏவாக இருந்த பண்ருட்டி ராமச்சந்திரன் கட்சி தலைமையோடு ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் தன்னுடைய எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார். 2019 ஆம் ஆண்டு அதிமுகவில் பிளவு ஏற்பட்டு டிடிவி தினகரன் ஆதரவு எம்எல்ஏக்கள் 18 பேர் திடீரென தங்களுடைய எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தனர். இதனால் அந்த 18 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடந்தது. 2024 ஆம் ஆண்டில் காங்கிரஸ் எம்எல்ஏ விஜயதரணி தன்னுடைய பதவியை ராஜினாமா செய்து பாரதிய ஜனதா கட்சியில் இணைந்தார். அதன்பிறகு எம்எல்ஏக்கள் கட்சி தாவி பதவியை ராஜினாமா செய்து அதனால் இடைத்தேர்தல் நடக்கப்போவது இது 4ஆவது முறையாக இருக்கிறது.

அரசியல்வாதிகளின் இது போன்ற செயல்பாடுகளால் தேர்தல் ஆணையம் மீண்டும் ஒரு முறை தேர்தலுக்கான ஏற்பாடுகளை செய்து வாக்குப்பதிவினை நடத்த வேண்டும். இதனால் கூடுதல் செலவு ஏற்பட்டு மக்களின் வரிப்பணம் தான் தேவையில்லாமல் செலவு செய்யப்படுகிறது. தேர்தல் வாக்காளர்கள் மீண்டும் சொந்த ஊருக்கு செல்வது என மக்களுக்கும் இது சிரமம் தான். அதுவும் தேர்தல் முடிந்து 1 மாத காலத்திலேயே அதுவும் தேர்தல் முடிவு வந்து ஒரு மாதம் கூட ஆகாத நிலையில் இது போன்ற செயல்கள் மக்களின் அதிருப்தியை அதிகரிக்க செய்துள்ளன.

# வீர சாவர்க்கரின் தைரியமும், தேசபக்தியும் மக்களுக்கு உத்வேகம் அளிக்கும்: பிறந்தநாளில் நினைவு கூர்ந்தார் மோடி!



புதுடில்லி, மே. 28–

வீர சாவர்க்கரின் பிறந்த நாளை நினைவு கூர்ந்த பிரதமர் மோடி, ‘‘அவரது தைரியமும், தேசபக்தியும் மக்களுக்கு என்னென்றும் உத்வேகம் அளிக்கும்,’’ என்றார். சுதந்திரப் போராட்ட வீரர் வீர சாவர்க்கர் பிறந்த நாள் இன்று (மே 28). அவர் 1883ம் ஆண்டு மே 28 அன்று மஹாராஷ்டிர மாநிலம் நாசிக் அருகே உள்ள பாகூர் என்ற இடத்தில் பிறந்தார். அவரது பிறந்த நாளில் இன்று தலைவர்கள் சமூக வலைதளத்தில் பதிவுகளை வெளியிட்டு இருக்கின்றனர். அதன் விபரம் பின்வருமாறு:

**பிரதமர் மோடி**

வீர சாவர்க்கரை அவரது பிறந்தநாளில் நினைவுகூர்கிறோம். அவரது துணிச்சலும் தேசபக்தியும் மக்களுக்கு என்றும் உத்வேகம் அளிக்கும். அவரது அறிவுத்திறனும் சமூக சீர்திருத்தத்திற்கு அவர் அளித்த முக்கியத்துவமும் குறிப்பிடத்தக்கவை.

**மத்திய உள்துறை அமைச்சர், அமித்ஷா**

சுதந்திரப் போராட்ட வீரரான வீர சாவர்க்கர், தனது வாழ்நாள் முழுவதையும் தாய்நாட்டிற்கு சேவை செய்வதற்காக அர்ப்பணித்தார். தீண்டாமை போன்ற சமூகத் தீமைகளை வன்மையாக எதிர்த்துத் தன் நாட்டு மக்களை ஒன்றிணைத்த சாவர்க்கரின் அர்ப்பணிப்பு நம் அனைவருக்கும் வழிகாட்டியாகத் திகழும்.

**பாதுகாப்பு துறை அமைச்சர், ராஜ்நாத் சிங்**

மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரரான சாவர்க்கரின் பிறந்தநாளில் என் மரியாதையைச் செலுத்துகிறேன். தேசியவாத சிந்தனையாளராக மட்டுமல்லாமல், ஆற்றல்மிக்க பேச்சாளர், கவிஞர் மற்றும் தத்துவஞானியாகவும் திகழ்ந்தார். அவர் பல இன்னல்களைத் தாங்கிக்கொண்டு, இந்தியாவின் சுதந்திரத்திற்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்தார்.

அவரது வாழ்க்கை, தியாகம், போராட்டம் மற்றும் தேசத்திற்கான தன்னலமற்ற சேவையின் அழியாத காவியமாகும். தாய்நாட்டின் மீதான அவரது பக்தியும், தேசத்தைக் கட்டியெழுப்புவதில் அவர் காட்டிய அர்ப்பணிப்பும் நாட்டு மக்களுக்கு என்றென்றும் உத்வேகம் அளிக்கும்.

**உத்தரபிரதேச முதல்வர், யோகி ஆதித்யநாத்**

தேசத்தின் சுதந்திரத்திற்காக மிகக் கொடூரமான மனிதாபிமானமற்ற சித்திரவதைகளைத் தாங்கி, தாய்நாட்டிற்காகத் தன் உயிரைத் தியாகம் செய்தவர் சுதந்திரப் போராட்ட வீரர் சாவர்க்கர். அவரது போராட்ட வாழ்க்கை, தேச நலனுக்கான அர்ப்பணிப்பு, துணிவு ஆகியவை என்றைக்கும் நிலைத்து நிற்கும்.

# மும்மொழிக் கொள்கைக்கு இடைக்காலத் தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு!



புதுடெல்லி, மே. 28–

நடப்பு கல்வியாண்டு முதல் அனைத்து சிபிஎஸ்இ பள்ளிகளிலும் 9ம் வகுப்பு மாணவர்களுக்கு மும்மொழிக் கொள்கையை கட்டாயமாக்கும் மத்திய அரசின் உத்தரவுக்கு எதிராக, எந்த இடைக்கால தடையும் பிறப்பிக்க முடியாது என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மும்மொழிக் கொள்கைக்கு எதிராக பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரித்த இந்தியத் தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதிகள் ஜாய்மால்யா பாக்சி, விபுல் எம். பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு இவ்வாறு தெரிவித்துள்ளது.

மேலும் இதுகுறித்து 4 வாரங்களுக்குள் விரிவான பதிலளிக்குமாறு மத்திய அரசு, சிபிஎஸ்இ மற்றும் என்சிஇஆர்டி ஆகியவற்றுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

மனுதாரர்கள் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் முகுல் ரோஹத்கி, ‘களத்தில் போதிய தயார்நிலை இல்லாதபோதிலும், சிபிஎஸ்இ சுற்றறிக்கையானது ஜூலை 1 முதல் மாணவர்கள் மூன்று மொழிகளைக் கற்க வேண்டும் என்பதை கட்டாயப்படுத்துகிறது’ என்று வாதிட்டார். மேலும் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களைச் சுட்டிக்காட்டி, ‘‘பாடப்புத்தகங்கள்கூடகிடைக்கவில்லை’ என தெரிவித்தார்.

இந்த வழக்குடன் தொடர்புடைய மற்றொரு மனுவில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் கபில் சிபல், ‘‘இந்த விவகாரம் கூட்டாட்சித் தத்துவம் மற்றும் ஒருவரின் மொழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உள்ளிட்ட முக்கியமான அரசியலமைப்புச் சட்டக் கவலைகளை எழுப்புகிறது’’ என்று வாதிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், ‘‘மொழி என்பது தனிமனித விருப்பம் சார்ந்த விஷயம்; அதை கட்டாயப்படுத்தி திணிக்க முடியாது’’ என்று குறிப்பிட்டதுடன், இந்த மும்மொழிக் கொள்கை கூட்டாட்சி அமைப்பில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது என்றும் சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்த நீதிபதிகள் அமர்வு, ‘‘இந்தக் கட்டத்தில் நீதிமன்றம் கூட்டாட்சித் தத்துவம் சார்ந்த அம்சங்களை ஆராயவில்லை; மாறாக, பள்ளிகளில் ஆசிரியர்களின் பற்றாக்குறை மற்றும் பாடப்புத்தகங்கள் கிடைப்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் போன்ற அமலாக்கம் தொடர்பான பிரச்சினைகளில் மட்டுமே கவனம் செலுத்துகி றது’’ என்று தெரிவித்தது.

விசாரணையின் போது, மத்திய அரசுக்காக ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஐஸ்வர்யா பாட்டி, மும்மொழிக் கொள்கைக்கு உடனடியாக அவசர இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் என்ற மனுதாரர்களின் கோரிக்கையை கடுமையாக எதிர்த்தார்.

மேலும் இந்த கொள்கையின் அமலாக்கமானது உச்ச நீதிமன்றத்தின் இறுதி உத்தரவுகளுக்கு உட்பட்டதுதான் என்பதால், இந்த விவகாரத்தை அவசரப்படாமல் பின்னர் விரிவாக விசாரிக்கலாம் என்றும் தெரிவித்தார்.

**புதிய சிபிஎஸ்இ விதிமுறை என்ன?**

தேசிய கல்விக் கொள்கை 2020–ன்படி, 2026 ஜூலை 1 முதல் 9–ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மும்மொழிக் கொள்கை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் மாணவர்கள் 3 மொழிகளைப் படிக்க வேண்டும்; அதில் குறைந்தது 2 மொழிகள் இந்திய மொழிகளாக இருக்க வேண்டும். ஆங்கிலம் போன்ற வெளிநாட்டு மொழிகளை 3–வது அல்லது கூடுதல் மொழியாக மட்டுமே தேர்வு செய்ய முடியும்.

அடுத்த ஆண்டு 10–ஆம் வகுப்பு பொதுத்தேர்வை எதிர்கொள்ளவிருக்கும் ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் மீது, திடீரென கூடுதல் மொழிகளைத் திணிப்பது கடுமையான கல்விச் சுமையையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தும் என பெற்றோர்களும், ஆசிரியர்களும் தெரிவிக்கின்றனர்.



தேனி மாவட்டம் ஆட்சியர் கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற மாற்றுதிறனாளிகள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுதிறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்திய பெட்ரோல் ஸ்கூட்டரை, மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜித்சிங் வழங்கினார்.



தேனி மாவட்டம் பெரியகுளம் திரவியம் கலை மற்றும் அறிவியல் கலை கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இதில் தனியார்துறையில் பணியாற்ற, பணி நியமன ஆணையை மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜித் வழங்கினார்.

# எஸ்டிபிஐ கட்சி திருப்பூர் வடக்கு மாவட்டம் சிறப்பு செயற்குழு கூட்டம்!




திருப்பூர்,. மே. 28–

எஸ்டிபிஐ மாவட்ட சிறப்பு செயற்குழு கூட்டம் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது வடக்கு மாவட்ட செயற்குழு மாவட்ட தலைவர் பசீர் அகமது தலைமையில் நடைபெற்றது.மாவட்டச் செயலாளர் இதயத்துல்லா.வரவேற்புரை நிகழ்த்தினார்.மாவட்ட பொதுச் செயலாளர் அப்துல் வகாப்.மாவட்ட துணை தலைவர் ஜாபர் சாதிக். மாவட்ட செயலாளர் அக்பர் அலி.மாவட்ட பொருளாளர் ஜாபீர் அகமது.மாவட்ட செயற்குழு உறுப்பினர் வி. கேன். பாபு


ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்

மாவட்ட செயற்குழு உறுப்பினர்

முகமது யாசின் நன்றி உரையாற்றினார்

தெற்கு தொகுதி தலைவர்

அன்வர் பாஷா.காங்கேயம் தொகுதி தலைவர் திப்பு சுல்தான் ஆகியோர் கலந்து கொண்டனர் இதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



# 2026 ஆம் ஆண்டின் குரு பெயர்ச்சி; 12 ராசிகளுக்கான பலன்கள்!




ஜோதிடத்தில் முழு சுபர் என அழைக்கப்படும் குரு பகவான் மிதுனத்திலிருந்து கடக ராசிக்கு பெயர்ச்சி நடக்கிறது. வாக்கிய பஞ்சாங்கத்தின் படி மே 26ம் தேதியும் (வைகாசி 12), திருக்கணித பஞ்சாங்கத்தின் படி ஜூன் 2ம் தேதியும் (வைகாசி 19) அன்று இந்த பெயர்ச்சி நடப்பதாக ஜோதிடர்கள் தெரிவிக்கின்றனர். குருவின் இந்த நகர்வால் அதிர்ஷ்டமான மற்றும் கவனமுடன் இருக்க வேண்டிய ராசியினர் யார், அவர்களுக்கான ஒருவரி பலன்கள் என்ன என்பதை இங்கு பார்ப்போம்.

கடக ராசியில் குரு பகவான் உச்சம் அடைவதால் ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, மீனம் போன்றராசிகளுக்கு விபரீத ராஜயோகமும், சிறப்பான நற்பலன்களும் கிடைக்கப் போகின்றன .

ஆன்மீக ரீதியாகவும், ஜோதிட ரீதியாகவும் 2026–ம் ஆண்டு மிக முக்கியமான ஆண்டாக அமையப்போகிறது. இந்த ஆண்டில் நிகழப்போகும் குரு பெயர்ச்சி 2026 அனைத்து ராசிகளிலும் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்த உள்ளது.

நவகிரகங்களில் சுப கிரகமான குரு பகவான், மிதுன ராசியிலிருந்து கடக ராசிக்கு இடம்பெயர உள்ளார். கடகம் குரு பகவானுக்கு ‘‘உச்ச வீடு’’ என்பதால், இந்த பெயர்ச்சி பலருக்கு ராஜயோகத்தை வழங்கப்போகிறது.

**12 ராசிகளுக்கான பலன்கள்;**

**மேஷம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியும், சுப காரியங்களும் கைகூடும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய லாபம் கிடைக்கும்.

**ரிஷபம்:** பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும்.

**மிதுனம்:** பண வரவு அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் செல்ல நேரிடும். தடைபட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும்.

**கடகம்:** குரு உச்சம் பெறுவதால் தொழில் மற்றும் ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும். புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

**சிம்மம்:** தேவையற்ற செலவுகள் குறையும். மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

**கன்னி:** நினைத்த காரியம் கைகூடும். நீண்ட நாட்களாகக் காத்திருந்தவர்களுக்கு நல்ல வரன் மற்றும் வேலை வாய்ப்புகள் அமையும்.

**துலாம்:** தொழில் வளர்ச்சியும், எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கும். கடன் தொல்லைகள் நீங்கும்.

**விருச்சிகம்:** தைரியம் அதிகரிக்கும். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. புதிய முதலீடுகள் லாபம் தரும்.

**தனுசு:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பயணம் செய்யும் போது கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

**மகரம்:** குடும்பத்தில் அமைதியும், தொழில் கூட்டாளிகளிடையே நல்ல புரிதலும் உருவாகும்.

**கும்பம்:** எதிரிகள் தொல்லை நீங்கும். ஆரோக்கியம் மேம்படும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி பெறும்.

**மீனம்:** நிதி நிலை சிறப்பாக இருக்கும். புத்திர பாக்கியம் மற்றும் புதிய சொத்துக்கள் வாங்கும் வாய்ப்புகள் உண்டாகும்.

## சினிமா துளிகள்..!

# ரூ.180 கோடியில் பிரபாஸ் கட்டி வரும் பிரமாண்ட பங்களா..!!



தெலுங்கு சினிமாவில் கலக்கி வந்த பிரபாஸ், பாகுபலி படத்துக்கு பிறகு இந்தியளவில் பிரபலமானார். அதன் பின்னர் அவரை வைத்து எடுக்கும் படங்கள் பான் இந்தியா படங்களாகவே எடுக்கப்பட்டு வருகின்றன. பெரிய பட்ஜெட் படங்களில் மட்டும் நடிக்கும் ஹீரோவாக பிரபாஸ் மாறிவிட்டார்.


சமீபத்தில் அவரது நடிப்பில் வெளியான ‘தி ராஜாசாப்’ பெரியளவில் வரவேற்பை பெறவில்லை. தற்போது அவர் ‘கல்கி–2’, ‘ஸ்பிரிட்’ போன்ற படங்களில் நடித்து வருகிறார்.

இதற்கிடையில் ஐதராபாத்தில் 3 ஏக்கர் நிலத்தில் ஒரு பிரமாண்ட பங்களாவை பிரபாஸ் கட்டி வருகிறார். இதன் கட்டுமான மதிப்பு மட்டுமே சுமார் ரூ.180 கோடி என்று சொல்லப்படுகிறது. அதில் நீச்சல் குளம், தியேட்டர், ஜிம் என பல சொகுசு அம்சங்கள் இடம் பெறுகிறதாம். பிரபாஸ் கட்டி வரும் புதிய வீட்டின் மாதிரி புகைப்படம் தற்போது இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### இந்த அறிகுறிகள் இருக்கா..? ஆனால் , இதை அலட்சியப்படுத்தினால் அது உயிருக்கே ஆபத்தாக முடியலாம்.!




புற்றுநோய் பலரை அச்சுறுத்துகிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்த நோயால் ஒரு கோடிக்கும் அதிகமானோர் உயிரிழக்கின்றனர். அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்தும் இரண்டாவது பெரிய நோய் இதுவாகும். புற்றுநோயில் பல வகைகள் உள்ளன. இரத்தப் புற்றுநோய் அவற்றில் ஒன்றாகும், மேலும் அதன் அறிகுறிகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் உயிர்களைக் காப்பாற்ற முடியும்.

ரத்தப் புற்றுநோய் என்பது இரத்தம் மற்றும் எலும்பு மஜ்ஜையைப் பாதிக்கும் ஒரு தீவிர நோயாகும். பொதுவாக, நமது உடல் இரத்த அணுக்களைக் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் உற்பத்தி செய்கிறது. ஆனால் இரத்தப் புற்றுநோய் ஏற்படும்போது, அசாதாரண இரத்த அணுக்கள் அதிக அளவில் வளர்ந்து, ஆரோக்கியமான செல்களின் செயல்பாட்டைச் சீர்குலைக்கின்றன. இது நோய் எதிர்ப்பு சக்தி குறைதல், சோர்வு மற்றும் நோய்த்தொற்றுகள் போன்ற பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும்.

ரத்தப் புற்றுநோயின் மிகவும் பொதுவான அறிகுறிகளில் ஒன்று தொடர்ச்சியான சோர்வு. ஓய்வெடுத்த பிறகும் உடல் பலவீனமாக உணர்வதுடன், அன்றாடப் பணிகளைச் செய்வதும் கடினமாகிறது. அடிக்கடி காய்ச்சல், காரணமின்றி உடல் எடை குறைதல் மற்றும் இரவில் அதிக வியர்வை போன்ற அறிகுறிகளும் காணப்படலாம். எளிதில் சிராய்ப்புகள் ஏற்படுதல், தோலில் நீல நிறப் புள்ளிகள் தோன்றுதல், மூக்கு அல்லது ஈறுகளில் இருந்து இரத்தம் வடிதல் போன்ற பிரச்சனைகளும் ஏற்படலாம்.

அடிக்கடி ஏற்படும் தொற்றுகளும் இரத்தப் புற்றுநோயின் ஒரு முக்கிய அறிகுறியாகும். ஏனெனில், இந்த நோய் உடலின் வெள்ளை இரத்த அணுக்களின் செயல்பாட்டைப் பாதிக்கிறது. இதன் விளைவாக, நோய்களை எதிர்த்துப் போராடும் திறனை உடல் இழக்கிறது. சிலருக்குக் கழுத்து, அக்குள் அல்லது தொடைகளில் வீங்கிய நிணநீர் கணுக்களும் காணப்படலாம். இரத்தப் புற்றுநோய்க்கான சிகிச்சையானது, நோயின் நிலை, வயது மற்றும் நோயாளியின் உடல்நிலையைப் பொறுத்து அமைகிறது.

தற்போது, மருத்துவத் துறையில் பல நவீன சிகிச்சைகள் உள்ளன. கீமோதெரபி புற்றுநோய் செல்களை அழிக்கிறது. இலக்கு சிகிச்சையானது, புற்றுநோய் செல்களை மட்டுமே குறிப்பாகப் பாதிக்கும் மருந்துகளைப் பயன்படுத்துகிறது. நோயெதிர்ப்பு சிகிச்சையானது, புற்றுநோயை எதிர்த்துப் போராட உடலின் நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்துகிறது. சில சமயங்களில், எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சையும் அவசியமாகலாம்.

"ரத்தப் புற்றுநோய் வந்த பிறகு எவ்வளவு காலம் வாழ முடியும்?" என்ற கேள்வியை பலர் கேட்கிறார்கள். இதற்குப் பதில் இல்லை. இது, புற்றுநோய் சிகிச்சைக்கு உடல் எவ்வாறு பதிலளிக்கிறது, அவர்களின் வயது மற்றும் உடல்நிலை போன்ற காரணிகளைப் பொறுத்தது. இருப்பினும், நவீன சிகிச்சைகள் இருப்பதால், பல நோயாளிகள் நல்ல வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர்.

உணவு விஷயத்திலும் சிறப்பு கவனம் தேவை. புரதம் நிறைந்த உணவுகள், பால், முட்டை, பருப்பு வகைகள், புதிய பழங்கள் மற்றும் பச்சை காய்கறிகளை உட்கொள்ள வேண்டும். போதுமான அளவு தண்ணீர் குடியுங்கள். வெளி உணவுகள், சுகாதாரமற்ற பொருட்கள் மற்றும் நோய்த்தொற்றை ஏற்படுத்தக்கூடிய உணவுகளை இயன்றவரை குறைத்துக்கொள்வது சிறந்தது. முறையான சிகிச்சையுடன் சேர்த்து, ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவது இரத்தப் புற்றுநோயை எதிர்த்துப் போராடுவதில் திறம்பட உதவும்.

# 3-வது நாளாக குறைந்த தங்கம் விலை!




சென்னை, மே. 28–

தங்கம் விலை மூன்றாவது நாளாக இன்றும் குறைந்துள்ளது. அதன்படி, தங்கம் கிராமுக்கு 150 ரூபாய் குறைந்து ஒரு கிராம் ரூ.14,500–க்கும் சவரனுக்கு 1200 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 16 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறது.

தங்கம் விலையை போல வெள்ளி விலையும் குறைந்துள்ளது. கிராமுக்கு ரூ.5–ம், கிலோவுக்கு ரூ.5 ஆயிரமும் குறைந்து, ஒரு கிராம் ரூ.285–க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 85 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# வெளிநாட்டு காவல் துறை போல் சிங்கப்பெண் சிறப்பு அதிரடி படைக்கு பிரத்யேக சீருடை அறிமுகம்!



சென்னை, மே. 28–

தமிழகத்தில் விரைவில் அறிமுகமாக உள்ள 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடி படை' போலீஸாருக்கு வெளிநாட்டு போலீஸ் போல் பிரத்யேக சீருடை தயாராகியுள்ளது.

இந்தப் படை முதல்வரின் நேரடி கண்காணிப்பில் செயல்படும் என தெரிவிக்கப்பட்டது. அடுத்த கட்டமாக அந்த படையின் தலைமை அதிகாரியாக ஐஜி பவானீஸ்வரி கடந்த வாரம் நியமிக்கப்பட்டார்.

இதில் ஒரு காவல் கண்காணிப்பாளர், 2 துணைக் காவல்கண்காணிப்பாளர்கள், 4 ஆய்வாளர் கள் உட்பட 30–க்கும் மேற்பட்ட போலீஸார் முதல்கட்டமாக நியமிக்கப்பட உள்ளனர். இந்த அதிரடிப் படைக்கு மற்ற காவல் துறையினரிடமிருந்து தனித்துவமாகத் தெரியும் வகையில் பிரத்யேகச் சீருடை மற்றும் புதிய சின்னம் (லோகோ) வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த சின்னத்தில் தைரியம், வேகம் மற்றும் அறிவுத்திறனை பறைசாற்றும் வகையில் சிங்கத்தின் முகம் பொறிக்கப்பட்டுள்ளது. களப்பணியில் துரிதமாகச் செயல்படும் வகையிலும், ரோந்துப் பணிகளை எளிதாக்கும் வகையிலும் இந்த சீருடைகள் நவீன தொழில்நுட்பத்துடன் தைக்கப்பட்டுள்ளன. கருப்பு நிறதொப்பி, பெல்ட், நேவி புளூ சட்டை,காக்கி பேன்ட் என அசத்தலாக இந்த சீருடை தயாராகியுள்ளது.

தமிழகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் இந்த அதிரடிப் படையினர் ரோந்துப் பணியில் ஈடுபடவுள்ளதால் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் உட்பட அனைத்து வகையான குற்றங்களும் வெகுவாகக் குறையும் என போலீஸார் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். இந்த சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படையை முதல்வர் விஜய் விரைவில் தொடங்கி வைக்க உள்ளார். விழாவில் உள் துறைச் செயலர் மணிவாசன், டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர், சென்னை காவல் ஆணையர் அமல்ராஜ், சட்டம் – ஒழுங்கு கூடுதல் டிஜிபி அன்பு உள்ளிட்ட பலர் கலந்துகொள்கின்றனர்.

# SIR-இல் பெயர் நீக்கம் செய்யப்பட்டவர்களின் குடியுரிமை ரத்தா? - உச்சநீதிமன்றம் விளக்கம்...!



சென்னை, மே. 28–

தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலிலிருந்து ஒருவரது பெயரை நீக்கிவிட்டது என்பதற்காக, அந்த நபர் இந்தியக் குடிமகன் அல்ல என்று கூறிவிட முடியாது என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பீகாரில் குடியுரிமையில் சந்தேகம் இருப்பதாகக் கூறி, எஸ்ஐஆர் மூலம் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களின் மனுவை தலைமை நீதிபதி சூர்யகாந்த் மற்றும் நீதிபதி ஜோய்மால்யா பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது.

அப்போது பேசிய அவர்கள், "வாக்காளர் பட்டியலில் சட்டப்பூர்வமாக ஒருவரது பெயரைச் சேர்ப்பதற்கான தகுதிகள் குறித்து தேர்தல் ஆணையம் திருப்தி அடையவில்லை என்பதை மட்டுமே இந்த நீக்கம் காட்டுகிறது.

இது வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதற்கும், அதன் மூலம் தேர்தலில் வாக்களிப்பதற்குமான ஒரு தனிநபரின் உரிமையை மட்டுமே தற்காலிகமாகப் பாதிக்கும்.

அதே நேரத்தில், இந்தியக் குடிமகன் என்ற முறையில் ஒரு நபருக்குக் கிடைக்க வேண்டிய மற்ற அடிப்படை உரிமைகளைப் பறிக்க இது ஒருபோதும் காரணமாக அமைந்துவிடக் கூடாது.

மேலும், குடியுரிமைச் சட்டத்தின்படி குடியுரிமை தொடர்பான தகுதிவாய்ந்த அதிகார அமைப்பின் முன் நிலுவையில் இருக்கும் ஒருவரது வழக்கைப் பாதிக்கவும் கூடாது." என்று தெரிவித்தனர்.

பீகாரில் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களின் குடியுரிமையை முழுமையாக ஆய்வு செய்து அவர்கள் இந்தியக் குடிமக்கள் தான் என்பது உறுதி செய்யப்பட்டால், அவர்களின் பெயர்களை உடனடியாக மீண்டும் வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

1955ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின்படி இவர்களின் குடியுரிமைத் தகுதியை மத்திய அரசு இறுதி செய்ய வேண்டும் என நீதிபதிகள் தெரிவித்தனர்.

# அசாம் மாநிலத்தில் பொது சிவில் சட்ட மசோதா நிறைவேற்றம்!



கவுகாத்தி, மே. 28–

திருமணம், விவாகரத்து, திருமணம் செய்யாமல் இணைந்து வாழ்தல், வாரிசுரிமை, தத்தெடுப்பு உள்ளிட்ட தனிநபர் சார்ந்த விவகாரங்களில் அனைத்து குடிமக்களுக்கும் ஒரே மாதிரியான சட்டங்களை அமல்படுத்தும் நோக்கில் நாடு முழுவதும் பொது சிவில் சட்டத்தை கொண்டு வருவது பாஜகவின் முக்கிய வாக்குறுதிகளில் ஒன்றாகும். இதனை பாஜக ஆளும் மாநிலங்கள் தற்போது அமல்படுத்தி வருகின்றன.

அந்த வகையில், உத்தராகண்ட் மாநிலங்களைத் தொடர்ந்து அசாம் மாநிலத்திலும் பொது சிவில் சட்டம் அமலாகிறது அசாம் சட்டப்பேரவையில் பொது சிவில் சட்ட மசோதா மே 25–ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த மசோதா நேற்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

சட்டப்பேரவையில் மசோதா நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, அது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட உள்ளது. ஒப்புதல் கிடைத்த பிறகு, அஸ்ஸாமில் பொது சிவில் சட்டம் அமலுக்கு வரும்.

## முன்னாள் 15 வேலம்பாளையம் நகர மன்ற தலைவர் எஸ்பி மணி நேரில் வாழ்த்து!

திருப்பூர், மே. 28–

திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் அலுவலக திறப்பு விழா பார்க் சாலையில் வெகு சிறப்பாக நடைபெற்றது விழாவில் சட்டமன்ற உறுப்பினர் பாலமுருகன் ரிப்பன் வெட்டி அலுவலகத்தை துவக்கி வைத்தார் இந்த விழாவில் முன்னாள் 15 வேலம்பாளையம் நகர மன்ற தலைவர் எஸ் பி மணி கலந்து கொண்டு சட்டமன்ற உறுப்பினருக்கு சால்வை அணிவித்து கௌரவித்தார் இந்த நிகழ்வில் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.



# நிலவில் நிரந்தர ஆய்வு தளம் அமைக்கும் மூன்று கட்ட திட்டத்தை வெளியிட்டது நாசா!



வாஷிங்டன், மே. 28–

நிலவில் மனிதர்களை குடியேற்றுவதற்கான ஆய்வுக்கு நிரந்தர தளம் அமைக்கும் மூன்று கட்ட திட்டத்தை நாசா அறிவித்துள்ளது.

அமெரிக்க விண்வெளி மையமான, 'நாசா' தலைமையில், சமீபத்தில் நான்கு விண்வெளி வீரர்கள் நிலவை சுற்றி வந்தனர். ஆர்ட்டெமிஸ்– – 2 திட்டம் மூலம் 54 ஆண்டுக்குப் பின், முதல் முறையாக நிலவை நெருங்கிச் சென்றனர்.

அந்த திட்டத்தை தொடர்ந்து, தற்போது நிலவில் நிரந்தர ஆய்வு தளம் அமைக்கும் மிகப்பெரிய திட்டத்தை நாசா அறிவித்துள்ளது. இதற்காக, 1.70 லட்சம் கோடி ரூபாய் செலவிட உள்ளனர்.

இந்த திட்டத்தின் மூலம் நிலவின் மேற்பரப்பில், 'ரோவர்கள், ட்ரோன்'கள் உள்ளிட்ட உபகரணங்களுடன் கூடிய நிரந்தர தளத்தை அமைக்க நாசா திட்டமிட்டுள்ளது.

இதில், 'ரோவர்' என்பது கேமராக்கள், சென்சார்கள் மற்றும் கற்கள், மணல் சேகரிக்கும் இயந்திர கைகள் கொண்ட வாகனம் ஆகும். ட்ரோன்கள் என்பவை ஆளில்லா சிறிய ரக விமானங்கள்.

இத்திட்டம் குறித்து நாசா நிர்வாகி ஜாரெட் ஐசக்மேன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

அமெரிக்கா மீண்டும் நிலவுக்கு திரும்புகிறது. நிலவில் அமைக்கப்படும் ஆய்வு தளம் மனிதகுலத்தின் முதல் நிரந்தர வெளி உலக தளமாக இருக்கும்.

இந்த ஆய்வு தளம், நிலவின் ஆபத்தான சூழலில் மனிதர்கள் எப்படி வாழ்வது, செயல்படுவது என்பதை கற்றுக்கொள்ள உதவும். அங்கு ரோவர்கள், ட்ரோன்கள் மற்றும் மேம்பட்ட உபகரணங்கள் இடம் பெறும்.

வரும் 2028–ல் சந்திரனில் விண்வெளி வீரர்களை இறக்கி விடுவதுதான் எங்கள் இலக்கு. அதற்காக இந்த ஆண்டே மூன்று விண்கலனை அனுப்பி தொழில்நுட்பங்களை சோதித்து, எதிர்கால விண்வெளி வீரர்களின் பயணத்திற்கு அடித்தளம் அமைக்க உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# வேலை வாய்ப்பு

### மத்திய அரசு (மத்திய மின்னணு பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம்) 22 காலிப்பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: CEERI மத்திய மின்னணுவியல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம்

அறிவிப்பு எண்: 01/2026, தேதி: 21.05.2026

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 22 தொழில்நுட்ப வல்லுநர் (1) [குழு–II (1)], தொழில்நுட்ப அதிகாரி [குழு–III (3)] பணியிடங்கள்

பணியிடங்கள்: சென்னை (தமிழ்நாடு), ஜெய்ப்பூர் (ராஜஸ்தான்), பிலானி (ராஜஸ்தான்)

தொடங்கும் தேதி: 21.05.2026 காலை 10.00 மணி

கடைசி தேதி: 20.06.2026 இரவு 11.59 மணி

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.ceeri.res.in/

# அதிமுகவில் இருந்து முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் விலகல்?



சென்னை, மே. 28–

அதிமுகவில் தொடரலாமா என்பது குறித்து முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் விராலிமலையில் உள்ள இல்லத்தில் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்யலாமா என்பது குறித்து ஆதரவாளர்களிடம் சி.விஜயபாஸ்கர் கேட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

நேற்று வேலுமணி தரப்பினர் எடப்பாடி பழனிசாமி இல்லம் சென்றபோது முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் செல்லவில்லை. ஆதரவாளர்களிடம் கருத்தை கேட்ட பின்னர் முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் இறுதி முடிவை எடுக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# இரண்டாக பிரிகிறது IPL போட்டிகள்?




சென்னை, மே. 28–

ஐபிஎல் கிரிக்கெட் தொடரை, இனிவரும் காலங்களில் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களுக்கு மாற்ற பிசிசிஐ ஆலோசனை செய்து வருகிறது. கடுமையான வெயில் மற்றும் விளம்பரதாரர்களின் வர்த்தக நலன்களை கருத்தில் கொண்டு இந்த பரிசீலனை நடக்கிறது.

கடும் வெயில் காரணமாக வீரர்கள் உடல் சோர்வுக்கு ஆளாகின்றனர். அதுமட்டுமில்லாமல் மைதானத்திற்கு வரும் ரசிகர்களும் அவதிப்படுகின்றனர். எனவே வரும் 2028 ஆம் ஆண்டு முதல் ஐபிஎல் போட்டிகளை இரண்டாக பிரிக்க திட்டமிட்டுள்ளார்கள். இதற்காக ஐபிஎல் போட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க பிசிசிஐ திட்டமிட்டுள்ளதாம். செப்டம்பர் – அக்டோபர் மாதத்தில் ஒரு பிரிவு போட்டியும் ஏப்ரல் – மே மாதங்களில் ஒரு பிரிவு போட்டியும் நடத்தப்படலாம் என சொல்லப்படுகிறது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் த.வெ.க.வில் இணைந்தார்..!



சென்னை, மே. 28–

முன்னாள் முதல்–அமைச்சர் ஓ. பன்னீர்செல்வத்தின் ஆதரவாளராக இருந்த வெல்லமண்டி நடராஜன், அவர் (ஓ.பி.எஸ்.) திமுகவில் இணைந்த பிறகு, அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து அதிமுகவில் இணைந்து கொண்டார். அவருக்கு அங்கு அமைப்புச் செயலாளர் பதவியும் வழங்கப்பட்டது.

இந்த நிலையில், த.வெ.க. தலைவரும் தமிழ்நாடு முதல்–அமைச்சருமான ஜோசப் விஜய், டெல்லி பயணம் மேற்கொண்டிருக்கும் நிலையில், அக்கட்சியின் பொதுச் செயலாளர் என். ஆனந்தத்தை நேரில் சந்தித்து வெல்லமண்டி நடராஜன் த.வெ.க.வில் இணைந்துள்ளார். மேலும் அவரின் மகன் ஜவஹர்லால் நேரு மற்றும் ஆதரவாளர்களும் த.வெ.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

அதிமுக எம்.எல்.ஏ.க்கள் 4 பேர் வெற்றி பெற்ற 3 வாரங்களுக்குள் தங்களின் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் இணைந்திருக்கும் சூழலில், வெல்லமண்டி நடராஜன் இணைந்திருப்பது அ.தி.மு.க.வினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த 2016ம் ஆண்டு திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற வெல்லமண்டி நடராஜன், முன்னாள் முதல்–அமைச்சர் ஜெயலலிதா அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தார். இந்நிலையில் நடைபெற உள்ள திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் வெல்லமண்டி நடராஜன், த.வெ.க. சார்பில் போட்டியிட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

# நமது அம்மா நாளிதழில் மீண்டும் எடப்பாடி பழனிசாமியின் பெயர் நிறுவனராக சேர்ப்பு!



சென்னை, மே. 28–

தமிழக சட்டசபை தேர்தலில் அதிமுக 47 தொகுதிகளில் வெற்றி பெற்றது. கடந்த 2021 தேர்தலில் ஆட்சியை இழந்து இருந்த அதிமுக, இந்த முறையும் தோல்வியை சந்தித்ததால், கட்சியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. தி.மு.க. ஆதரவுடன் அ.தி.மு.க. ஆட்சி என்ற பேச்சு எழுந்த நிலையில், அதிமுகவில் இரு வேறு கருத்து நிலவியது.

**கருத்து வேறுபாடு**

பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடந்த எம்எல்ஏக்கள் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் சி.வி.சண்முகம். எஸ்.பி. வேலுமணி உள்ளிட்டோர் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக போர்க்கொடி தூக்கினர். இதனால் அக்கட்சியில் பிளவு ஏற்பட்டது. தொடர்ந்து சட்டசபையில் த.வெ.க. அரசுக்கு ஆதரவு அளித்த எஸ்.பி.வேலுமணி, சி.வி. சண்முகம் உள்ளிட்ட 25 எம்எல்ஏக்கள் விவகாரம் அதிமுகவில் புயலை கிளப்பியது.

இதையடுத்து எஸ்.பி. வேலுமணி, சி.வி.சண்முகம், விஜயபாஸ்கர் உள்பட 26 பேரின் மாவட்ட செயலாளர் பதவியை பறித்து எடப்பாடி பழனிசாமி அதிரடி நடவடிக்கை எடுத்தார். எடப்பாடி பழனிசாமியின் இந்த நடவடிக்கைக்கையால் அதிமுகவில் பரபரப்பு ஏற்பட்டது. இதனிடையே நமது அம்மா நாளிதழின் ஆசிரியராக அதிமுகவை சேர்ந்த கல்யாண சுந்தரம் ராஜினாமா செய்தார். இந்த நாளிதழ் சிவி சண்முகம் கட்டுப்பாட்டில் இருப்பதாக சொல்லப்பட்டது. தற்போது அதிமுகவில் பரபரப்புகள் அடங்கி மீண்டும் இணக்கமான சூழல் திரும்பியுள்ள நிலையில், எடப்பாடி பழனிசாமியின் செய்திகள் நமது அம்மா நாளிதழில் இடம் பெறத்தொடங்கியுள்ளன. நாளிதழின் நிறுவனர் என எடப்பாடி பழனிசாமியின் பெயர் இடம் பெற்றுள்ளது.

# ரூ.2,500 கோடி மதிப்பிலான பிணையப் பத்திரங்கள் ஏலம்!



சென்னை, மே. 28–

ரூ.2,500 கோடி மதிப்பிலான பிணையப் பத்திரங்களை ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய இருப்பதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இதுதொடர்பாக தமிழக அரசின் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:– தமிழ்நாடு அரசு மொத்தம் ரூபாய் 2,500 கோடி மதிப்புள்ள பங்குகள் வடிவிலான ரூ.1,000 கோடி மதிப்புள்ள 7 ஆண்டு கால பிணையப் பத்திரம், ரூ.1,000 கோடி மதிப்புள்ள 10 ஆண்டு கால பிணையப் பத்திரம் மற்றும் ரூ.500 கோடி மதிப்புள்ள 15 ஆண்டு கால பிணையப் பத்திரம் ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய விருப்பதாக அறிவித்துள்ளது.

இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை கோட்டை அலுவலகத்தில் ஜூன் 2, 2026 அன்று நடத்தப்படும். போட்டி ஏலக்கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும், போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution (E–Kuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) ஜூன் 2, 2026 அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# ஆன்லைன் விளையாட்டுகளை தடை செய்யும் தமிழக அரசின் சட்டம் செல்லுபடியாகும்: சுப்ரீம் கோர்ட்டு!



புதுடெல்லி, மே. 28–

பணம் வைத்து விளையாடப்படும் ரம்மி, போக்கர் உள்ளிட்ட ஆன்லைன் விளையாட்டுகளை தடை செய்யும் வகையில் சட்டம் ஒன்றை தமிழக அரசு கொண்டு வந்தது. இதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை சென்னை ஐகோர்ட்டு தள்ளுபடி செய்தது. இதை எதிர்த்து ஆன்லைன் விளையாட்டு நிறுவனங்கள் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இதை நீதிபதிகள் பர்திவாலா, மகாதேவன் அமர்வு விசாரித்தது.

இதில் நேற்று தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள், ஆன்லைன் விளையாட்டுகளை தடை செய்யும் வகையில் கொண்டு வரப்பட்ட தமிழ்நாடு மற்றும் கர்நாடகா அரசுகளின் சட்டம் செல்லும் என தீர்ப்பளித்தனர்.

பந்தயம் மற்றும் சூதாட்டம் ஆகியவை வணிகத்துக்கு அப்பாற்பட்ட விஷயங்களாகக் கருதப்படுவதால், அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எந்தவொரு அடிப்படை உரிமையையும் கோர முடியாது என்று நீதிபதிகள் தங்கள் உத்தரவில் கூறினர். இதைப்போல ஆன்லைன் விளையாட்டு நிறுவனங்களுக்கு மத்திய அரசு விதித்துள்ள 28 சதவீத ஜி.எஸ்.டி.யும் செல்லுபடியாகும் என நீதிபதிகள் தீர்ப்பு அளித்தனர்.

# பக்ரீத் பண்டிகை கோலாகல கொண்டாட்டம்!



சென்னை, மே. 28–

ரம்ஜான் பண்டிகைக்கு அடுத்தப்படியாக இஸ்லாமியர்களின் முக்கிய பண்டிகையாக பக்ரீத் உள்ளது. இறை நம்பிக்கை, இரக்கம், சகோதரத்துவம், நல்லிணக்கம், தியாகத்தைப் போற்றும் வகையில் இஸ்லாமிய மாதமான துல்ஹிஜ்ஜின் 10ம் தேதி இறைவனின் கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு தனது மகனை பலியிட துணிந்த இறைத்தூதர் இப்ராஹிம் நபியின் தியாகத்தை நினைவுகூறும் விதமாக ஆண்டுதோறும் பக்ரீத் பண்டிகை கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிலையில், நாடு முழுவதும் பக்ரீத் பண்டிகை இன்று இஸ்லாமியர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. பக்ரீத் பண்டிகையையொட்டி இஸ்லாமியர்கள் அனைவரும் புத்தாடை அணிந்து ஆண்கள் சிறப்பு தொழுகை யில் ஈடுபடுவது வழக்கம். அந்த வகையில் அதிகாலையில் புத்தாடை அணிந்து இஸ்லாமியர்கள் சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர். பக்ரீத் பண்டிகை கொண்டாடிய முஸ்லிம்கள், ஏழை மக்களுக்கு குர்பானியாக ஆடு, மாடு உள்ளிட்டவற்றின் இறைச்சியை தானமாக அளித்தனர்.

சென்னையிலும் இன்று பக்ரீத் பண்டிகை உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது. காலையிலேயே இஸ்லாமியர்கள் புத்தாடை அணிந்து சிறப்பு தொழுகையில் ஈடுபட்டு ஒருவருக்கொருவர் வாழ்த்து தெரிவித்து மகிழ்ந்தனர். இதல் சிறுவர்களும் ஏராளமானோர் பங்கேற்றனர். சென்னை பெரம்பூர், ஓட்டேரி, ராயபுரம், புரசைவாக்கம், அண்ணாநகர், ஐஸ் அவுஸ், வண்ணாரப்பேட்டை, தண்டையார் பேட்டை, கொடுங்கையூர் உள்ளிட்ட சென்னை முழுவதும் உள்ள மசூதிகளில் நடந்த சிறப்பு தொழுகையில் ஏராளமான இஸ்லாமியர்கள் பங்கேற்றனர்.

நெல்லை மாவட்டத்தில் இஸ்லாமியர்கள் அதிகம் வசிக்கு பகுதியான மேலப்பாளையத்தில் அதிகாலை முதலே இஸ்லாமியர்கள் புத்தாடைகள் உடுத்தி தொழுகையில் ஈடுபட்டனர். தமிழகம் முழுவதும் திறந்தவெளி மைதானங்கள் மற்றும் மசூதிகளில் சிறப்பு தொழுகைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு மைதானங்களில் நடந்த தொழுகையிலும் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். அனைத்து மக்களும் அமைதியோடு வாழ வேண்டும். நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்று இஸ்லாமியர்கள் பிரார்த்தனை செய்தனர்.

# மக்களை சந்திப்பதற்காக முதல்-அமைச்சர் விஜய் விரைவில் திருச்சி வருகை!



திருச்சி, மே. 28–

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைவர் கு.ப.கிருஷ்ணன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது; திருச்சி கிழக்கு தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தமிழக முதல்–அமைச்சர் விஜய், வாக்காளர்களுக்கு நன்றி சொல்ல விரைவில் திருச்சி வருகை தர உள்ளார். மேகதாதுவில் அணைகட்ட தமிழக அரசு ஒருபோதும் அனுமதிக்காது. தொண்டர்களால் தேர்வு செய்யப்படுபவரே அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளராக இருக்க முடியும். அந்த வகையில் எடப்பாடி பழனிசாமி அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளர் கிடையாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்வது. அவர்களுடைய சொந்த விருப்பம். அரசியலில் எது வேண்டுமானாலும் நடக்கலாம், தற்பொழுது கட்சியில் சேர்ந்தவர்களுக்கு மீண்டும் எம்.எல்.ஏ. சீட்டு வழங்கப்படுமா என்பதை தலைமை தான் முடிவு செய்யும். இவ்வாறு அவர் கூறினார்.

# தொடரும் டாஸ்மாக் ஊழியர்கள் வேலைநிறுத்த போராட்டம்!



ஈரோடு, மே. 28–

தமிழகத்தில் வழிபாட்டு தலங்கள், கல்வி நிறுவனங்கள், பஸ் நிலையங்களில் இருந்து 500 மீட்டர் தூரத்துக்குள் உள்ள 717 டாஸ்மாக் மதுபான கடைகளை உடனடியாக மூட வேண்டும் என்று முதல்–அமைச்சர் விஜய் அறிவித்தார். அதன்படி ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் உள்ள 183 டாஸ்மாக் கடைகளில் 40 கடைகள் கண்டறியப்பட்டு மூடப்பட்டன. தற்போது மாவட்டத்தில் 143 டாஸ்மாக் மதுக்கடைகள் செயல்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் அனைத்து கடைகளிலும் காலி மதுபாட்டில்களை திரும்பப்பெறும் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி எந்த கடையில் மதுவை வாங்குகிறார்களோ அதே கடையில் காலி மது பாட்டில்களை திருப்பி கொடுத்தால் கூடுதலாக கொடுத்த ரூ.10–யை கடை ஊழியர்கள் திருப்பி கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. இதன் காரணமாக கூடுதல் வேலைப்பளு ஏற்படுவதாகவும், எனவே இந்த திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும் டாஸ்மாக் ஊழியர்கள் கோரிக்கை வைத்தனர். இவர்களுடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால், ஈரோடு மாவட்டத்தில் கடந்த 25–ந்தேதி முதல் டாஸ்மாக் ஊழியர்கள் கடையை திறக்காமல் காலவரையற்ற வேலைநிறுத்த போரா ட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் இந்த போராட்டம் இன்று 4–வது நாளாக நீடிக்கிறது. இதற்கிடையில் ஈரோடு அருகே சூரியம்பாளையம் பகுதியில் உள்ள டாஸ்மாக் மேலாளர் அலுவலகத்தை டாஸ்மாக் ஊழியர்கள் நேற்று முற்றுகையிட்டனர். அவர்களுடன் அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இதில் உடன்பாடு ஏற்படவில்லை.

அதாவது, கோர்ட்டு உத்தரவின்படி கண்டிப்பாக காலி மதுபாட்டில்களை வாங்க வேண்டும் என்று டாஸ்மாக் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் டாஸ்மாக் ஊழியர்கள் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இதுகுறித்து டாஸ்மாக் ஊழியர்கள் கூறும்போது, 'ஈரோடு மாவட்டத்தில் அரசு உத்தரவுபடி 40 டாஸ்மாக் மதுக்கடைகள் மூடப்பட்டன. இதனால் மற்ற கடைகளில் கூட்டம் அதிகமாக உள்ளது. இதன் காரணமாக காலி மது பாட்டில்களை வாங்குவதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே இந்த திட்டத்தை ரத்து செய்ய வேண்டும். எங்களுடைய கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம் தொடரும்' என்றனர்.

இந்த நிலையில் கடந்த 3 நாட்களாக மாவட்டத்தில் உள்ள அனைத்து மதுக்கடைகளும் மூடப்பட்டுள்ளதால் மதுவாங்க முடியாமல் மதுப்பிரியர்கள் திண்டாட்டம் அடைந்துள்ளனர். இதற்கிடையில் உயர்ரக பாருடன் கூடிய தனியார் மதுக்கடைகளை நோக்கி மதுப்பிரியர்கள் படையெடுக்க தொடங்கி உள்ளனர். இதனால் அந்த கடைகளில் வழக்கத்தைவிட கூட்டம் அலைமோதுகிறது.

# அ.தி.மு.க. தரப்பு மனுக்கள் மீது சபாநாயகர் முடிவு: சி.வி.சண்முகம் நிலைப்பாடு என்ன..?



சென்னை, மே. 28–

அ.தி.மு.க.வை ஒன்றிணைக்கும் நோக்கில் அக்கட்சியின் இரு தரப்பினரும் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினர். இதனைத்தொடர்ந்து சி.வி.சண்முகம் இல்லத்தில் இருந்து எஸ்.பி. வேலுமணி தலைமையில் 14 எம்.எல்.ஏ.க்கள் எடப்பாடி பழனிசாமியை சந்திக்க இன்று புறப்பட்டனர். பறித்த கட்சி பதவிகளை மீண்டும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் எடப்பாடி பழனிசாமியை சந்திப்பதாக தகவல் வெளியானது. எஸ்.பி. வேலுமணி தரப்பு எம்.எல்.ஏ.க்கள், எடப்பாடி பழனிசாமியை சந்தித்து மன்னிப்பு கடிதம் வழங்கினர்.

**சமாதான பேச்சுவார்த்தை**

இதற்கிடையில் எடப்பாடி பழனிசாமியை சந்திக்க சி.வி.சண்முகம் வர மறுத்ததாக கூறப்படுகிறது. அவரை தங்கமணி நேரில் சென்று சமாதானப்படுத்தினார். பின்னர் எம்.ஆர்.சி. நகரில் உள்ள வீட்டுக்கு சி.வி. சண்முகத்தை ஒரே காரில் அவர் அழைத்து வந்தார். அங்கு எஸ்.பி. வேலுமணியும், மற்ற எம்.எல்.ஏ.க்களும் வந்தனர். சி.வி.சண்முகத்திடம் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானப்படுத்த முயன்றனர். அ.தி.மு.க.வில் அவரும் ஒன்றிணைந்திருப்பதாக எஸ்.பி. வேலுமணி தெரிவித்திருந்தார்.

**இணைய மறுப்பு**

இந்தநிலையில் பேச்சுவார்த்தை முடிந்தபின் சி.வி.சண்முகம் வீட்டில் இருந்து வெளியே வந்தார். அவரிடம் நிருபர்கள் கேள்வி கேட்க முயன்ற போது, 'தற்போது நான் எதுவும் பேச விரும்பவில்லை' எனக்கூறி எந்த பதிலையும் தெரிவிக்காமல் காரில் ஏறி அவர் கோபத்துடன் புறப்பட்டு சென்றார். அவர் எடப்பாடி பழனிசாமியுடன் இணைய விருப்பம் இல்லாமல் மறுத்ததாக கூறப்படுகிறது.

சி.வி.சண்முகத்திடம் தொடர்ந்து வேலுமணி தரப்பினர் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானப்படுத்த முயல்வதாகவும் கூறப்படுகிறது. அ.தி.மு.க.வில் எஸ்.பி.வேலுமணி அணியில் இருந்த மற்ற அனைவரும் இணைந்த நிலையில், சி.வி.சண்முகத்தின் நிலைப்பாடு என்னவென்று அவர் அறிவிக்காமல் இருக்கிறார்.

**சி.வி.சண்முகத்துக்கு எதிர்ப்பும், ஆதரவும்**

அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து சி.வி.சண்முகம் தனது ஆதரவாளர்களுடன் சென்னையில் உள்ள வீட்டில் ஆலோசனை நடத்தி வருகிறார். சி.வி.சண்முகத்துடன் விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த அவரது ஆதரவாளர்களான 18 ஒன்றிய செயலாளர்கள், 3 நகர செயலாளர்கள், 4 பேரூர் செயலாளர்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர். சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் உள்ளனர். அவர்களுடன், கட்சியின் எதிர்கால நலன் கருதி எடப்பாடி பழனிசாமி அணியுடன் சேரலாமா அல்லது த.வெ.க.வில் இணையலாமா என்பது குறித்து சி.வி.சண்முகம் ஆலோசனை நடத்தி வருவதாக கூறப்படுகிறது.

இந்த சூழலில் விழுப்புரம் மாவட்ட செயலாளர் பசுபதி உள்ளிட்ட சில மூத்த நிர்வாகிகள், சி.வி.சண்முகத்தை மீண்டும் அ.தி.மு.க.வில் சேர்க்க கூடாது, சேர்த்தால் நாங்கள் வெளியேறுவோம் என்று கூறி வருகிறார்கள். இதனால் அதிமுக கட்சி வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.






Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020